www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2022

பரதநாட்டியம் II
Dance II

Three Hours

Gr -13 (2022)

53 T II

### பகுதி II

❖ **பகுதி I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி I

01. i) நீர் கற்ற பத வர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii) மேலே குறிப்பிடட வர்ணத்தின் பாடலை எழுதியவர், நாட்டிய அமைப்புச் செய்தவர் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

iii) மேற்குறித்த வர்ணத்தின் இரண்டாவது சரணஸ்வரக் கோர்வைகளை தாள அங்கக் குறியீட்டில் எழுதுக. (4 புள்ளி)

iv) மேற்குறித்த வர்ணத்தின் பல்லவி முடிவுற வரும் தீர்மானத்தினை தாள அங்கக் குறியீட்டில் எழுதுக. (12 புள்ளி)

02. i) இலங்கையின் ஸாஸ்திரிய நடனங்களையும் அந்நடனங்கள் தோற்றம் பெற்ற இடங்களையும் குறிப்பிடுக. (3 புள்ளி)

ii) கண்டிய நடனத்தை பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

i) தோற்றம் (3 புள்ளி)

ii) வளர்ச்சி (3 புள்ளி)

iii) கொஹோம்பகங்காரிய சடங்கில் 6 உபபிரிவுச் சடங்குகளைக் குறிப்பிடுக.(3 புள்ளி)

iv) பதினெட்டு வகை வண்ணங்களில் 4 வண்ணங்களை குறிப்பிட்டு விளக்குக. (8 புள்ளி)

03. i) அ) பஞ்ச ஜாதி ததிங்கிணதொம் வரிசையில் சதுஸ்ர ஜாதி ததிங்கிணதொம் அடவிணை சதுஸ்ர திரிபுடை தாளத்தில் எழுதுக. (3 புள்ளி)

ஆ) ஸப்த தாளங்கள் 35 தாளமாகும் முறையினை விரும்பிய தாளத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (4 புள்ளி)

ii) 35 தாளங்கள் 175 தாளமாகும் முறையினை விரும்பிய ஒரு தாளத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (4 புள்ளி)

iii) பின்வரும் எண்ணிக்கைகளை உடைய தாளங்கள், ஜாதி, கதி, என்பவற்றைக் குறிப்பிடுக.

1) 20  2) 90  3) 112  4) 126  5) 203  6) 45 (9 புள்ளி)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

04. i) குருகுலக் கல்விக்கும் நிறுவனக்கல்விக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக.
(10 புள்ளிகள்)

ii) கலை வளர்ச்சிக்கு இராமநாதன் நுண்கலைத் துறை ஆற்றும் பங்கு பற்றி விபரிக்குக.
(10 புள்ளிகள்)

05. i) அபிநயம் என்றால் என்ன? (4 புள்ளி)

ii) நால் வகை அபிநயங்களையும் குறிப்பிட்டு அவற்றின் உப பிரிவுகளையும் தருக.
(8 புள்ளி)

iii) பரத நாட்டிய ஆற்றுகையில் நால் வகை அபிநயங்கள் வகிக்கும் பங்கினை விபரிக்குக.
(8 புள்ளி)

06. திரு ஏரம்பு சுப்பையா அவர்களின் வாழ்க்கைப் பின்னணியினையும் அவரது கலைத் தொண்டினையும் தருக.
(20 புள்ளிகள்)

07. தொழில் நுட்ப சாதனங்கள் மூலம் கற்பிக்கப்படும் செயன்முறையானது நடன செயன்முறைப் பாடத்தில் ஏற்படுத்தியுள்ள சாதக பாதக விளைவுகள் பற்றி ஆராய்க.
(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i) குற்றாலக் குறவஞ்சி
ii) சொக்கரி
iii) சங்கு
iv) மகிடிக்கூத்து

(4x5 = 20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2022

FWC

| | | |
|---|---|---|
| பரதநாட்டியம் I<br>Dance I | Two Hours<br>Gr -13 (2022) | 53 T I |

### பகுதி I

❖ 1 – 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையினை தெரிந்தெடுத்து புள்ளடி இடுக.

01. வினையற வேல் வாங்கும் பெருமான் எனக் கூறப்படும் கடவுள்
   1) விநாயகர் 2) முருகன் 3) கிருஷ்ணன் 4) சிவன் 5) பார்வதி

02. பிருகன் நாயகி பெயரில் பிருகதம்பா என்ற பாடலைப்பாடியவர்.
   1) சு.பொன்னையா 2) சு. வடிவேலு 3) வி.கே. நல்லையா
   4) பிரம்ம ஸ்ரீ வீரமணிஜயர் 5) சின்னையா

03. 24 மெட்டுக்களுடைய வீணையை அமைத்தவர்
   1) ரகுநாதநாயக்கர் 2) சீதாராமையர் 3) கோவிந்த தீட்சிதர்
   4) ரமணதாஸ் 5) கிருஸ்ணையர்

04. அஷ்டபதி என்ற பரத நாட்டிய உருப்படியின் பரமாத்மா
   1) விஷ்ணு 2) பிரம்மா 3) சிவன் 4) கணபதி 5) முருகன்

05. இந்திரனை அபிநயிக்கப் பொருத்தமான பாதபேதம்
   1) ஐந்திரம் 2) ஸ்வஸ்திகம் 3) மோடிதம் 4) ஏகபாதம் 5) சமபாதம்

06. பிண்டி என்பது.
   1) அபிநயச் செய்கை 2) இரட்டைக்கைச் செய்கை3) எழிற்கைச் செய்கை
   4) தொழிற் செய்கை 5) ஒற்றைக்கைச் செய்கை

07. நடனத்தினை "குனிப்பு" என அழைக்கப்பட்ட இலக்கிய காலப்பகுதி
   1) சங்க காலம் 2) சங்கமருவிய காலம் 3) சோழர் காலம்
   4) பல்லவர் காலம் 5) நாயக்கர்காலம்

08. சுத்தநிருத்தத்திற்குப் பிரதானமாக அமைய வேண்டிய அம்சம்
   1) கவர்ச்சி 2) அழகு 3) சுருதி 4) லயம் 5) மென்மை

09. எழுபத்திரெண்டு மேளகர்த்தா சக்கரம் இரு பெரும் பிரிவுகளாவதற்கு காரணம்
   1) ஸட்ஜம் 2) மத்திமம் 3) பஞ்சமம் 4) தைவதம் 5) காந்தாரம்

10. ஈழத்தில் கலைக்கும், சமயத்திற்கும் தொண்டு புரிந்த கலைஞர்
   1) பிரம்ம ஸ்ரீ வீரமணிஜயர் 2) கீதாஞ்சலி வி. கே நல்லையா
   3) திரு ஏராம்பு சுப்பையா 4) அருணாசல நட்டுவனார்
   5) ஜகதாம்பாள் அம்மா

11. கர்நாடக இசைக்காக 72 மேளகர்த்தா இராகங்களுக்கான பாடல்களை இயற்றியவர்.
   1) கலாநிதி பாலமுரளிகிருஷ்ணா 2) முத்துத்தாண்டவர் 3) பிரம்ம ஸ்ரீ வீரமணிஜயர்
   4) கவிக்குஞ்சரபாரதி 5) வெங்கடமகி

12. பாகவதமேளம் என்ற நடன நாடகக்கலை வடிவம் காணப்படும் ஸாஸ்திரிய நடனம்.
   1) கதக் 2) கதகளி 3) ஒடிசி 4) குச்சிப்புடி 5) மணிப்புரி



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

13. எலத் தாளம் பிரதானமாகப் பயன்படுத்தப்படும் ஆடல் வகை
    1) கதகளி 2) பரதநாட்டியம் 3) மணிப்புரி 4) ஒடிசி 5) கதக்

14. மிஸ்ர ஜாதி அடதாளம் கண்டகதியுடன் சேரும் போது வரும் மாத்திரைகள்
    1) 90 2) 92 3) 94 4) 96 5) 98

15. தயாவீரனுக்கு உதாரணமாக எடுத்துக் கூறப்படுபவர்.
    1) சிபிச்சக்கரவர்த்தி 2) துரியோதனன் 3) இராவணன்
    4) கர்ணன் 5) அர்ச்சுனன்

16. உலக நடனதினம் கொண்டாடப்படும் தினம்.
    1) ஜனவரி 01 2) பெப்ரவரி 14 3) மார்ச் 30 4) ஏப்ரல் 29 5) யூன் 30

17. ஆடல் அமைப்பில் பெண்ணை அடையாளம் காட்டப்பிரயோகிக்கப்படும் ஹஸ்தம்
    1) டோலம் 2) சுவஸ்திரம் 3) கடஹாவர்த்தனம்
    4) அவஹித்தம் 5) கீலகம்

18. திருவான்மியூரில் நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனம்
    1) சங்கீத வித்துவ சபை 2) விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவனம்
    3) இராமநாதன் நுண்கலைத்துறை 4) கலாஷேத்திரா
    5) கலைக்காவேரி நடனப்பயிலகம்

19. நாட்டிய ஸாஸ்திரத்தில் சாரி அசைவுகள் பற்றி விளக்கமாக கூறப்படும் அத்தியாயம்.
    1) 12 2) 10 3) 15 4) 14 5) 11

20. "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து" எனக் கூறியவர்.
    1) சம்பந்தர் 2) அப்பர் 3) மணிவாசகர் 4) சுந்தரர் 5) சேக்கிழார்

21. குமாரஸ்வாமி நட்டுவனாரின் மூத்த குமாரர்
    1) சுப்பராய நட்டுவனார் 2) கந்தப்ப நட்டுவனார் 3) அருணாசல நட்டுவனார்
    4) கங்கைமுத்து நட்டுவனார் 5) கிருஷ்ண நட்டுவனார்

22. கிராமியக் கலைகளில் ஒன்றான வாசாப்பு கூத்தினை நிகழ்த்தும் பிரதேசம்
    1) மட்டக்களப்பு 2) மன்னார் 3) மலையகம்
    4) யாழ்ப்பாணம் 5) முல்லைத்தீவு

23. பதவர்ணங்களில் தீர்மானம் முடிவடைந்ததும் இடம் பெறுவது
    1) கோர்வை 2) ஜதி 3) தாளம் 4) அடவு 5) அறுதி

24. எண்ணெண் கலையும் இசைந்துடன் போக …….. என்ற பாடலடியின் மூலம் அறுபத்து நான்கு கலைகள் பற்றிக் கூறும் நூல்
    1) காமசூத்திரம் 2) சிலப்பதிகாரம் 3) தொல்காப்பியம்
    4) நாட்டிய ஸாஸ்திரம் 5) சரஸ்வதி அந்தாதி

25. சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியோர்.
    1) காஞ்சிபுரம் சகோதரர்கள் ஆவார் 2) சிதம்பரம் சகோதரர் ஆவார்
    3) மயிலாப்பூர் சகோதரர்கள் ஆவார் 4) தஞ்சை சகோதரர்கள்
    5) மதுரை சகோதரர்கள்

26. கிடதக தரிகிடதொம், தக்கிடதக தரிகிட தொம் தகதிகு கிடதகதரிகிட தொம் அமைந்த யதி அமைப்பு
    1) சம யதி 2) மிருதங்க யதி 3) கோபுச்ச யதி 4) ஸ்ரோதோவகயதி 5) டமருக யதி

27. தூதுப் பதமாக அமையும் பாடலடி
    1) வரவழைக்க எனக்கு வழி தெரியும் முருகா
    2) கண்ணனிடம் எடுத்து சொல்லடி சகியே
    3) எங்கு தான் செல்வேன் ஐயா
    4) அறிவேன் ஐயா உன் அந்தரங்கமெல்லாம்
    5) கூவி அழைக்க கூடாதா குருபரா



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

28. ஹாஸ்ய ரஸத்தில் அபஹசித்தம் குறிப்பது.
    1) அட்டகாசமான சிரிப்பு 2) புன் முறுவல் 3) கண்ணீருடன் கூடிய சிரிப்பு
    4) பிறரைச்சிரிக்க வைத்தல் 5) இளநகை

29. தெலுங்கு மொழியில் பாடலும் தமிழ் மொழியில் வசனங்களும் இணைந்திருக்கும் நாட்டிய நாடக அமைப்பு
    1) குற்றாலக் குறவஞ்சி 2) பாகவதமேளம் 3) யக்ஷகானம்
    4) நந்தனார் சரித்திரம் 5) இராமாயணம்

30. கிருஷ்ண பகவானின் தரிசனத்தைப் பெற்று பாமாவின் கதையினை எழுதியவர்.
    1) சிந்தேந்திரயோகி 2) நாராயணயதி 3) பாகவதர்
    4) பேரய்யாஸாஸ்திரி 5) ஆருத்ரா

31. கோபுச்ச யதியினைக் குறிக்கும் இசை வாத்தியம்
    1) முரசு 2) நாதஸ்வரம் 3) தவில் 4) புல்லாங்குழல் 5) சங்கு

32. நாடகத்தில் பயன்படுத்தப்படும் மொழியில் ஆர்யபாஷை குறிப்பது
    1) பாமரனின் மொழி 2) விண்ணகத்தோர் மொழி 3) உயர் குடியினரின் மொழி
    4) விலங்குகளின் மொழி 5) தமிழ் மொழி

33. கேரளத்தில் கதகளி நடனத்திற்கு புத்துயிர் அளித்தவர்.
    1) மேனகா 2) கவிவள்ளத்தோல் 3) கொட்டாரக்கரை
    4) இராமுண்ணிமேனன் 5) குயில் தம்பிரான்

34. மோகினியாட்டம் பற்றிய குறிப்புக்கள் அடங்கிய நூல்
    1) பரதஸாஸ்திரம் 2) அபிநயதர்ப்பணம் 3) வியவஹாரமால
    4) கோஷயாத்திரா 5) சிலப்பதிகாரம்

35. பரத நாட்டிய ஆரம்பப் பயிற்சியின் போது உபயோகிக்கப்படுபவை.
    1) மிருதங்கம், தபேலா 2) வயலின், வீணை 3) தம்புரா, வயலின்
    4) உடுக்கு, தபேலா 5) தட்டுக்கழி தட்டுப்பலகை

36. வரிக் கோலத்தின் வகைகள் எத்தனை
    1) 05 2) 07 3) 08 4) 09 5) 10

37. நாட்டிய ஸாஸ்திரம் பற்றி மலையாளத்தில் எழுதப்பட்ட நூல்
    1) பாலராமா பரதம் 2) கந்துகதந்திரம் 3) கோஷயாத்திரா
    4) வியவஹாரமால 5) ஹஸ்த லக்ஷணதீபிகா

38. “சௌட்டிக்காரன்” என்பது.
    1) வர்ணம் பூசுபவர் 2) கட்டிடவேலை புரிபவர் 3) நடிகன்
    4) ஒப்பனைக்காரன் 5) நட்டுவனார்

39. ஞானியரின் அடையாளம் குறிப்பது.
    1) முக்கண் 2) சடைமுடி 3) கங்கை 4) பூநூல் 5) திருமுகம்

40. ஆனந்தத் தாண்டவ மூர்த்தம் காணப்படும் சன்நிதி
    1) சிதம்பரம் 2) பிருகதீஸ்வரர் 3) சோமேஸ்வரம்
    4) கோணேஸ்வரம் 5) அருணாசலேஸ்வரர்

❖ **41 – 45 வரையான வினாக்களுக்கு அட்டவணையைப் பயன்படுத்தி மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| ரஸம் | தோற்றம் | கடவுள் | நிறம் | எதிர் ரஸம் |
|---|---|---|---|---|
| A | துக்கம் | எமன் | சாம்பல் | ஹாஸ்யம் |
| சிருங்காரம் | B | விஷ்ணு | C | பீபத்ஸம் |
| ரௌத்ரம் | கோபம் | ருத்திரன் | சிவப்பு | D |
| பயானகம் | பயம் | E | கறுப்பு | வீரம் |



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

41. A இல் இடம்பெற வேண்டிய ரஸம்
 1) சிருங்காரம் 2) ரௌத்ரம் 3) பயானகம் 4) கருணை 5) ஹாஸ்யம்

42. B இல் இடம்பெற வேண்டிய தோற்றம்
 1) காதல் இன்பத்திலிருந்து பிறத்தல் 2) கோபம் 3) பயம்
 4) துக்கம் 5) வலிமை

43. C இல் இடம்பெற வேண்டிய நிறம்
 1) சாம்பல் 2) சிவப்பு 3) கறுப்பு 4) நீலம் 5) பச்சை

44. D யில் இடம் பெற வேண்டிய எதிர் ரஸம்
 1) ஹாஸ்யம் 2) பீபத்ஸம் 3) வீரம் 4) ரௌத்ரம் 5) அற்புதம்

45. E இல் இடம்பெற வேண்டிய கடவுள்
 1) எமன் 2) ருத்திரன் 3) இந்திரன் 4) பிரம்மாள் 5) புத்தர்

46. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஆட்டமுறை
 1) புங்சோலம்
 2) கர்த்தசோலம்
 3) கம்பாதோய்பி
 4) அரிபாலா
 5) சங்கீர்த்தனம்



47. இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ள ஒப்பனை எந்நடனத்திற்குரியது.
 1) ஒடிசி
 2) கதக்
 3) மோகினியாட்டம்
 4) கதகளி
 5) பரதம்



48. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவி எந்நடனத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.
 1) கதகளி
 2) மணிப்புரி
 3) ஒடிசி
 4) பரதநாட்டியம்
 5) கதக்



49. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள பாதபேதம்
 1) மண்டலம்
 2) ஆலிடம்
 3) பிரேங்கணம்
 4) ஸ்வஸ்திகம்
 5) மோடிதம்



50. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நடனக் கலைஞர்
 1) கௌரியம்மா
 2) பார சரஸ்வதி
 3) ருக்குமணி தேவி
 4) பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
 5) சின்னையா



(50 x 2 = 100 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk